# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
# Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),
# District Munsif, Arni.
# O.S.105/2018

2025—ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 செந்தில்குமார் வயது 47, த/பெ அண்ணாமலை**

**குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பு)**

1ம் பிரதிவாதி அண்ணாமலை எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் தந்தை ஆவார். 2ம் பிரதிவாதி ராணி எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் அத்தை ஆவார். 3ம் பிரதிவாதி பிரதீப் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் அத்தை மகன் ஆவார். 4ம் பிரதிவாதி தேவி மற்றும் 5ம் பிரதிவாதி ரம்யா எனக்கு என்ன உறவுமுறைகாரர்கள் என்றால் என் தங்கைகள் ஆவர். நான் என் தந்தை மற்றும் தங்கைகள் கூட்டு குடும்பமாக வசித்து வருகிறோமா என்றால் என் திருமணத்திற்கு முன்பு வரை கூட்டு குடும்பமாகதான் வசித்து வந்தோம். என் திருமணத்திற்கு பின்னர் தனித் தனியாக வசித்து வருகிறோம்.

2. எனக்கு திருமணம் எப்போது நடைபெற்றது என்றால் 2008ம் ஆண்டு நடைப்பெற்றது. மேற்படி 4 மற்றும் 5ம் பிரதிவாதிகளை தவிர்த்து வேறு உடன்பிறந்தவர்கள் யாரேனும் உள்ளனரா என்றால் இல்லை. அவர்கள் 2 பேர் மட்டும்தான் என் உடன் பிறந்த தங்கைகள். தாவா சொத்து என் தந்தை கிரையம் பெற்ற தனி சொத்து ஆகும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 பத்திரம் யார் பெயரில் உள்ளது என்றால் என் தந்தை பெயரில் உள்ளது. அவர் சின்னப்பா மற்றும் காந்தியிடம் மேற்படி தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். என்னிடம் அசல் பத்திரம் உள்ளதா என்றால் இல்லை. கூட்டு குடும்பமாக வாங்கிய சொத்தாகும்.

3. என் தந்தை மேற்படி வா.சா.ஆ.1ல் உள்ள தாவா சொத்தை 2001ம் ஆண்டு கிரையம் பெற்ற போது எனக்கு என்ன வயது என்றால் சுமார் 24, 25 வயதிருக்கும். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ஓட்டுநராக பணி புரிந்து வருகிறேன். நான் எந்த வருடத்தில் ஓட்டுநராக பணி யில் சேர்ந்தேன் என்றால் 2003ம் ஆண்டில் சேர்ந்தேன். என் பெற்றோர்களை எனக்கு திருமணம் ஆன பின்னிட்டு நான் பராமரித்து வரவில்லை என்றால் திருமணம் ஆகி 1 ஆண்டுகாலம் கூட்டு குடும்பமாகதான் வசித்து வந்தோம். அதன் பின்னர் என் தந்தைக்கும், என் மனைவிக்கும் பிரச்சினைகள் ஏற்பட்டு என் மனைவி அவரின் பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார். அதன் பிறகு குழந்தை பிறந்து சமாதானம் செய்து தனிக்குடித்தனம் செய்து வந்தோம்.

4. அதன் பிறகு நானும் என் பெற்றோரும் கூட்டு குடும்பமாக வசித்து வரவில்லை என்றால் சரிதான். அவர்கள்தான் என்னை வீட்டை விட்டு வெளியேற்றியதால் நாங்கள் பிரிந்து விட்டோம் என்றால் சரிதான். என் தந்தைக்கு எவ்வளவு சொத்து பாத்தியப்பட்டது என்றால் சுமார் 8 அல்லது 9 ஏக்கர் இருக்கும. சாட்சி தன்னிச்சையாக தற்போது எதுவும் இல்லை என்று கூறினார். மேற்படி விவரங்களை தாவாவில் சர்வே எண்ணுடன் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அதை விற்று விட்டார்கள். என் தாவா வாதுரையில் 6 ஏக்கர் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன், ஆனால் தற்போது 8 அல்லது 9 ஏக்கர் உள்ளது என்று சொல்கிறேன் என்பதால் எது உண்மை என்றால் 8 அல்லது 9 ஏக்கர் என்பதுதான் உண்மை.

5. மேற்படி சொத்துக்களை யார் யாருக்கு விற்றார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். யார் யாருக்கு விற்றார் என்றால் ஏழுமலை, குமார் அதன் பின்னிட்டு ராணி ஆகியோருக்கு விற்றார். நான் ஆவணங்களை என் தந்தை எவ்வளவுக்கு விற்றார் என்ற விவரத்தை பார்த்தேனா என்றால் இல்லை. தற்போது என் தந்தைக்கு எவ்வளவு சொத்து உள்ளது என்றால் 24 செண்ட் மட்டும்தான் உள்ளது. சாட்சி தன்னிச்சையாக கொல்லைமேட்டில் 60 செண்ட் நிலம் உள்ளது. மேற்படி கொல்லைமேட்டில் உள்ள 60 செண்ட் நிலத்திற்கான பத்திரத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. என் தந்தை எனக்கு ஏதேனும் சொத்தை எழுதி வைத்தாரா என்றால் எழுதி வைத்தார். மேற்படி பத்திரத்தை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி விவரங்களை தாவா வாதுரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அவர் தாக்கல் செய்துள்ள எதிருரையில் என் தந்தை மேற்படி விவரங்களை சொல்லியுள்ளார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் தந்தை கூலி வேலை செய்கிறாரா என்றால் இல்லை. சித்ரா காபி பாரில் வாட்ச்மேனாக வேலை செய்கிறார். என் தந்தைக்கு எவ்வளவு சம்பளம் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

7. என் தந்தைக்கு 80 வயது முதியவர் என்ற விவரம எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் தாயாரை என் தந்தைதான் பராமரித்து வருகிறார் என்றால் தெரியும். என் தாயாருக்கு 65 வயது என்பது தெரியுமா என்றால் தெரியாது. நான்தான் என் பெற்றோருக்கு ஒரே மகன் என்றால் சரிதான்.

03.02.16ல் என் பெற்றோரை மிரட்டி 2 ஏக்கா் 67 செண்டை ஏமாற்றி என் பெயரில் செட்டில்மெண்ட் எழுதி கொண்டேன் என்றால் மிரட்டி எழுதி வாங்கவில்லை, வீடு கட்டி தர சொன்னேன் அல்லது நிலத்தை எழுதி வைக்க சொன்னேன் அல்லது 4 லட்சம் பணம் கேட்டேன். வங்கியில் கடன் பெற்று வீடு கட்ட வேண்டும் என்று சொன்னேன். அதன் பின்னிட்டு பஞ்சாயத்து செய்துதான் நான் மேற்படி தான செட்டில்மெண்டை என் பெற்றோரிடமிருந்து வாங்கினேன்.

8. மேற்படி 2 ஏக்கா் 67 செண்ட் என் தந்தை சுயமாக சம்பாதித்த சொத்தா என்றால் இல்லை, என் தாத்தாவின் சொத்தாகும். மேற்படி சொத்தில் என் தங்கைகளுக்கு பாகம் கொடுத்தேனா என்றால் இல்லை. என் தங்கைகளுக்கு தனியாக தலா 50 செண்ட் என் பெற்றோா் எழுதி வைத்தாா்கள். எனக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்டில் என் தங்கைகள் கையொப்பமிட்டாா்களா என்றால் இல்லை. மேற்படி தானசெட்டில்மெண்ட் எழுதிய விவரம் என் தங்கைகளுக்கு தெரியாமல் எழுதப்பட்டது என்றால் தெரியுமா, தெரியாதா என்று எனக்கு தெரியாது என்று சாட்சி கூறினாா்.

9. என் தங்கைகளுடன் எத்தனை வருட காலமாக பேச்சு வாா்த்தை இல்லை என்றால் 7 வருடமாக பேச்சு வாா்த்தை இல்லை. தாவா சொத்தின் சா்வே எண் தெரியுமா என்றால் சா்வே எண்.106/6 ஆகும். அதன் மொத்த நிலம் 61 செண்ட் என்றால் சரிதான். என் தந்தைக்கு ஏற்பட்ட கடனுக்காக 20 செண்ட் விற்றாா் என்றால் 20 செண்ட் 2ம் பிரதிவாதிக்கும், 21 செண்ட் 3ம் பிரதிவாதிக்கும் விற்றாா் என்றால் 41 செண்ட் விற்றாா் என்றால் சரிதான். மேற்படி பணம் வாங்கி கொண்டு கிரையம் கொடுத்தாா் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மீதமுள்ள 20 செண்ட் யாா் வசம் உள்ளது என்றால் என் தந்தை வசம்தான் உள்ளது.

10. மேற்படி 20 செண்டை வைத்துதான் அவா் குடும்பம் நடத்தி வருகிறாா் என்றால் இல்லை. 60 செண்ட் கொல்லைமேட்டில் வைத்துள்ளாா். அவருக்கு 60 செண்ட் கொல்லைமேட்டில் கிடையாது ஆகையால்தான் நான் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சொத்து உள்ளது, ஆனால் ஆவணங்கள் இல்லை, என் தந்தைதான் அனுபவித்து வருகிறாா். தாவா சொத்தின் பட்டா யாா் பெயரில் உள்ளது என்றால் அருணாசலம் என்பவா் பெயரில் உள்ளது. அருணாசலம் பெயரில் உள்ள சொத்து என் தந்தை சொத்து என்றால் சரிதான். பட்டா மட்டும் அவா் பெயரில் உள்ளது.

11. நான் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் என் தந்தை கூட்டு குடும்ப சொத்தை என்னை கேட்காமல் விற்று விட்டார், அதனால் மேற்படி சொத்தில் பங்கு கோரியும், அதன் அடிப்படையில் வழிப்பாதை கோரியும் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கை நான் பாகம் கேட்டுதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் முழு சொத்தை கோரி பரிகாரம் கேட்டேன். அவருக்குள்ள கடன் சுமையை நான் ஏற்றுக் கொள்கிறேன், அதற்கு பதிலாக சொத்தை என் பெயருக்கு எழுதி வைக்க சொன்னேன், ஆனால் என் பெற்றோர்கள் அவ்வாறு செய்யவில்லை.

12. என் தந்தை என்னிடம் எவ்வளவு கடன் உள்ளது என்று சொல்லி உள்ளாரா என்றால் இல்லை, என் தந்தை என்னிடம் கடன் அடைக்க சொல்லி கேட்டுள்ளாரா என்றால் இல்லை. என் தந்தைக்கு உரிமையான சொத்தை என்னை கேட்காமல் விற்றதன் அடிப்படையில்தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் தாயாரை நான் பராமரிக்கவில்லை என்று சார் ஆட்சியரிடம் என் மீது தாயார் மூத்த குடிமகன் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் புகார் அளித்தார் என்றால் சரிதான்.

13. மேற்படி புகார் எந்த வருடத்தில் கொடுக்கப்பட்டது என்றால் கடந்த வருடம் 2024ம் ஆண்டு கொடுக்கப்பட்டது. அந்த மனுவில் என் தாயார் பத்திரம் எழுதி வாங்கிய பின் என் மகன் எங்களை பராமரிக்கவில்லை என்று ஆட்சேபணை குறிப்பிட்டு சொல்லி உள்ளார் என்றால் சரிதான். என் தாயாரை பராமரிக்க 2 ஆயிரம் ரூபாய் கொடுக்க எனக்கு சார் ஆட்சியர் உத்தரவிட்டார் என்றால் தெரியாது. 16.07.2025 தாசில்தார் உத்தரவை பிறப்பித்தார் என்றால் மேற்படி விவரம் எனக்கு தெரியாது. மேற்படி உத்தரவு பிறப்பித்தும் மாதம் ரூபாய் 2 ஆயிரம் என் தாயாருக்கு கொடுத்தேனா என்றால் பணம் கொடுக்கவில்லை, ஆனால் அதற்கு பதிலாக 2 மூட்டை நெல் கொடுத்தேன், அதை வாங்க மறுத்து விட்டார்கள்.

14. என் தந்தையை பழிவாங்க வேண்டும் என்றும், அவரை அநாதையாக நிற்க வைக்க வேண்டும் என்ற நோக்கத்திலும் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தந்தைதான் அவ்வாறு நினைத்து கொண்டிருக்கிறார். என் தந்தை சுயமாக சம்பாதித்த சொத்தை அனுபவிக்க நான் கேள்வி கேட்க முடியாது என்றால் அவர் சுயமாக சம்பாதித்த சொத்து இல்லை, என் தாத்தா சொத்தைதான் அனுபவித்து வருகிறார். தாவா சொத்து கூட்டு குடும்ப சொத்து என்று சொல்வது பொய் என்றாலும், அதை ஏற்க முடியாது என்றாலும் சரியல்ல. என் தாத்தா சம்பாதித்த

சொத்தாகும். தாவா சொத்து என் தாத்தா பெயரில் உள்ளதா என்றால் இல்லை. என் தந்தை பெயரில் உள்ளது. இவ்வழக்கு மோசடியான வழக்கு என்றாலும், என் தந்தையை பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்பதால் நஷ்ட ஈடு மற்றும் தாவாவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,
Arni.